தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre Homebush Inc.
PO Box 4032, Homebush, NSW 2140.

**பேச்சுப் போட்டி 2024** **ஆண்டு 5**

அனைவருக்கும் வணக்கம்

## கற்கை நன்றே

“பிச்சை புகினும் கற்கை நன்றே”

என்றார் ஔவையார். மனிதன் தேடிப் பெறக்கூடிய செல்வங்கள் எல்லாவற்றிலும் தலை சிறந்தது கல்வி. பிறரிடம் இரந்து பிச்சை எடுத்தாவது கற்றல் வேண்டும் என்று விளக்குகிறார்.

கல்விச் செல்வம் வெள்ளத்தினாலும் அழியாதது. நெருப்பினாலும் அழியாதது. கள்வராலோ பகைவராலோ அரசராலோ கவர்ந்து செல்ல முடியாதது. கல்வியைப் பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கக் குறையாது பெருகிக்கொண்டே செல்லும். ஆகவே கல்வி தேடற்கு அரிய பெரும் செல்வமாகும்.

கல்வியைத் தேடிப் படிக்கப் படிக்க அறிவு பெருகும். அறிவுடையோரே வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவர். ஏழையாய் இருந்தாலும் கற்றவனுக்கு அறிஞர் முதலிடம் கொடுப்பர்.

பாராளும் மன்னருக்கு அவரது நாட்டில் மட்டுமே சிறப்பு. ஆனால் கல்வி கற்றுத் தேர்ச்சி அடைந்தவனுக்கு எந்த நாட்டிலும் சிறப்புண்டு. அதனால் சிறுவர்களாகிய நாம் கல்வியைப் போற்றி மதித்துக் கற்போம். வாழ்க்கையில் உயர்வு பெறுவோம்.

நன்றி

வணக்கம்